| Headline | Govt urged to be more open in fixing electricity tariff | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Malar (Sunday) | | |
| Date | 07 Apr 2019 | Language | Tamil |
| Circulation | 22,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 4 |
| ArticleSize | 176 cm² | Journalist | NULL |
| PR Value | RM 2,985 | | |
| | | | |



# மின் கட்டணத்தை நிர்ணயிப்பதில் வெளிப்படைத்தன்மை தேவை

பெட்டாலிங் ஜெயா, ஏப். 7–

தேசிய மின் நிறுவனமான தெனாகா நேஷனல் தமது கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று பலர் கோரிக்கை விடுத்து வரும் இவ்வேளையில், மின் கட்டணத்தை தீர்மானம் செய்வதில் புத்ரா ஜெயா வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று ஒரு முதலீட்டு ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

மின்சாரம் தயாரிக்க பயன்படுத்தப்படும் முக்கிய மூலப்பொருள்களாக நிலக்கரி மற்றும் வாயுவின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதே இதற்கான காரணம் என்று ஃபிலிப் முதலீட்டு நிறுவனத்தின் தலைமை வியூக வியலாளர், புவா லீ கெர்க் தெரிவித்துள்ளார்.



குறைந்த முதலீட்டு செலவினங்களின் பலன்கள் பயனீட்டாளர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வதற்கு அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது என்றார் புவா.

6 மாதகாலத்திற்கு ஒரு முறை மின்கட்டணத்தை எரிபொருள் ஆணையம் நிர்ணயம் செய்கிறது. மின் கட்டணம் தற்போதைக்கு குறைக்கப்படாது என்று தெனாகா நேஷனல் பெர்ஹாட் தலைவர் லியோ மோகி நேற்று முன்தினம் அறிவித்து இருந்தார்.

Powered by: iSENTIA